# வேளாண்மை அறிவியல் மையம்
## கீழ்நெல்லி, திருவண்ணாமலை மாவட்டம்
(மத்திய அரசுசார் நிறுவனம்)

## பார்த்தீனியம் ஒழிபபு விழிப்புணர்வு முகாம் மற்றும் பேரணி

வந்தவாசி, 2017 ஆகஸ்ட் 21ஆம் தேதி வேளாண் அறிவியல் மையம், கீழநெல்லி சார்பாக பார்த்தீனியம் ஒழிப்பு விழிபபுணர்வு முகாம் மற்றும் பேரணி வந்தவாசி வட்டம், வழூர் கிராமத்தில் நடைபெற்றது.

முகாமில் வேளாண் அறிவியல் மைய முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் திரு.ந.ரமேஷ்ராஜா கலந்து கொண்டு பார்த்தீனியம் இந்தியாவில் பரவிய முறைகள் மற்றும் பார்த்தீனியம் நச்சுச் செடியால் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படும் தீமைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். முகாமில் வந்தவாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திரு.குமரன் அவர்கள் கலந்து கொண்டு பார்த்தீனியம் நச்சுச் செடியால் பயிர்களுக்கு ஏற்படும் தீமைகள் பற்றியும் வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விரிவாக விளக்கினார்.

மேலும் வேளாண் அறிவியல் மையத்தை சேர்ந்த தொழில் நுட்ப அலுவலர்கள் திருமதி. மார்க்ரெட், திரு. சுரேஷ், திரு. ராஜேஷ், திரு. நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு அவரவர் துறை சார்ந்த தொழில் நுட்பங்கள் குறித்து தெளிவாக எடுத்து கூறினார்கள். முகாமின இறுதியாக விவசாயிகள் மற்றும் பெண்கள் உள்ளிட்டோர் பார்த்தீனியம் ஒழிப்பு பற்றிய பதாகைகளை ஏந்தி பேரணி நடத்தினர். மேலும் பார்த்தீனியம் ஒழிப்பு முறைகள் குறித்த செயல்விளக்கங்களும் செய்து காண்பிக்கப்பட்டது. பார்த்தீனியம் ஒழிப்பு முறைகள் குறித்து துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

விழாவிற்கான ஏற்பாடுகளை வழூர் பொன்னேர் உழவர் மன்றத்தின் தலைவர் திரு. வாசுதேவன் செய்திருந்தார்.

தினமணி

# பார்த்தீனியச் செடி ஒழிப்பு விழிப்புணர்வு



வந்தவாசியை அடுத்த வழூர் கிராமத்தில் பார்த்தீனியம் செடிகளை ஒழிப்பது குறித்த செயல்விளக்கம் அளித்த கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையத்தினர்.

**வந்தவாசி, ஆக. 21:** கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையம் சார்பில் பார்த்தீனியம் செடி ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் வந்தவாசியை அடுத்த வழூர் கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

பார்த்தீனியம் செடிகளால் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படும் தீமைகள் உள்ளிட்டவை குறித்து கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மைய முதன்மை விஞ்ஞானி ந.ரமேஷ்ராஜா, வந்தவாசி வட்டார வேளாண் உதவி இயக்குநர் தே.குமரன் ஆகியோர் விளக்கி பேசினார்.

பார்த்தீனியம் செடிகளை ஒழிப்பது குறித்து மைய தொழில்நுட்ப அலுவலர்கள் மார்க்ரெட், சுரேஷ், ராஜேஷ், நாராயணன் ஆகியோர் பேசினர். மேலும், இது குறித்த செயல்விளக்கமும் அளிக்கப்பட்டது. வழூர் பொன்னேர் உழவர் மன்றத் தலைவர் வாசுதேவன் நன்றி தெரிவித்தார்.




வேளாண்மை அறிவியல் மையம்
ICAR-Krishi Vigyan Kendra